# 19 செபம்

*(தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் டேமியனின் பெற்றோருக்கு பிரதம வைத்தியரை வந்து சந்திக்குமாறு கூறப்பட்டது)*

*தந்தை : எம்மை வரச் சொன்னீர்களா ஐயா...*

*வைத்தியர் : ஆமாம், வாருங்கள். அமருங்கள். டேமியனின் நிலை அவ்வளவு நல்லதாக இல்லை என்பதை சொல்வதற்காகவே உங்களை வரவழைத்தேன். வைத்தியர் என்ற ரீதியில் எம்மாலான அனைத்தையும் செய்தோம்.*

*தாய் : ஐயோ... ஆண்டவரே, எனது ஒரே மகன்*

*வைத்தியர் : குழப்பமடைய வேண்டாம். உங்களின் நிலை எனக்குப் புரிகிறது. இன்னும் இருபத்தி நான்கு மணித்தியாலங்களுள் டேமியனின் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டால் எம்மால் அவரைப் பிழைக்க வைக்க முடியும். அதைப்பற்றி கூறத்தான் உங்களை அழைத்தேன்.*

*தந்தை : ஐயா, இறைவன் எங்களை கைவிட மாட்டார். நாங்கள் செபிப்போம். இறைவன் எமக்குத் துன்பம் தர மாட்டாரென நான் நம்புகிறேன்.*
*(வைத்தியரிடம் விடை பெற்ற அவர்கள் தொடர்ச்சியாக செபித்தார்கள். சில மணித்தியாலங்களின் பின்னர் சிரித்த முகத்துடன் வைத்தியர் அவர்களிடம் வந்தார்.)*

*வைத்தியர் : மகிழ்ச்சியான செய்தி, ஒரு புதுமை நடைபெற்றுள்ளது. உங்கள் மகன் பிழைக்க முடியும்.*

*தந்தை : இறைவனுக்கு நன்றி. எமது வேண்டுதலுக்கு இறைவன் செவிசாய்ப்பாரென நான் உறுதியாக நம்பினேன். (மனைவி பக்கம் திரும்பி) மகனை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது கோயிலுக்குச் செல்ல வேண்டும்.*

*தாய் : ஆமாம், நானும் நினைத்தேன். மகனைக் கோயிலுக்கு கூட்டிச் சென்று மற்ற நாட்களை விட அதிகமாக செபிப்போம்.*

கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்விலே செபம் மிகவும் முக்கியமானது. மரத்துடன் அதன் பட்டை இணைந்திருப்பது போல் செபம் கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வில் ஒரு அங்கமாக இருக்க வேண்டும்

செபம் என்பது

இறைவனைப் பணிந்து தொழுவதும், அவருக்கு நன்றி சொல்வதும், அவரைப் புகழ்வதும் அவரிடம் நம் தேவை களுக்காக மன்றாடுவதும் அவர்பால் நம் சிந்தனையைச் செலுத்துவதுமாகும்.

*- பெரிய குறிப்பிடம் 283 -*

''செபம்'' என்பது இறைவனுடன் அன்பில் இணைந்து, நல்லுறவுடன் உரையாடுவதாகும். நாம் பக்தியுடன் மனம் ஒன்றித்துச் செபிக்க வேண்டும். அவ்வாறில்லாது வெறும் சொற்களை மாத்திரம் மனப்பாடத்துடன் சொல்வது நிறைவான செபம் அல்ல. எமது உள்ளத்தில் எழும் சிந்தனைகளை வார்த்தைகளாக்கி இறை தந்தையின் முன் வைத்தல் மிகவும் பலன் தரும்.

செபத்தில் நான்கு வகைகளுண்டு

1. புகழ்ச்சி
2. நன்றி கூறுதல்
3. பாவமன்னிப்பு வேண்டடல்
4. இறையருள் வேண்டடல்.

*- பெரிய குறிப்பிடம் 285 -*

கிறிஸ்தவர்களாகிய நாம் இறைதந்தையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதற்கு, எமது எந்தச் காரியத்தின்போதும் செபத்தில் ஈடுபட வேண்டும். எம் செபத்தில் இறை தந்தையைப் புகழுதல், நன்றி கூறல் பாவமன்னிப்பு வேண்டுதல், இறையருள் வேண்டடல் ஆகியன இடம்பெறுகின்றன.

எமக்கு அவசியமானவற்றைத் தரும் இறை தந்தையிடம் இடைவிடாது மனம் தளராது செபிக்க வேண்டுமென இயேசு உவமையின் மூலம் எமக்குக் கற்றுத் தந்துள்ளார்.

- திருவிவிலியத்திலுள்ள கீழ் கண்ட உவமையை வாசிக்கவும்

| நள்ளிரவில் வந்த நண்பன் பற்றிய உவமை (லூக் 11 :5-8) | நேர்மையற்ற நடுவன் பற்றிய உவமை (லூக் 18:1-8) |
|---|---|



படம் 19.1 - நள்ளிரவில் வந்த நண்பன்



படம் 19.2 - நேர்மையற்ற நடுவன்

## பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமை

தாங்கள் நேர்மையானவர் என்று நம்பி மற்றவர்களை இகழ்ந்து ஒதுக்கும் சிலரைப் பார்த்து இயேசு இந்த உவமையைச் சொன்னார் ''இருவர் இறைவனிடம் வேண்டக் கோவிலுக்குச் சென்றனர். ஒருவர் பரிசேயர், மற்றவர் வரிதண்டுபவர். பரிசேயர் நின்றுகொண்டு, இவ்வாறு இறைவனிடம் வேண்டினார் 'கடவுளே, நான் கொள்ளையர், நேர்மையற்றோர், விபச்சாரர் போன்ற மற்ற மக்களைப் போலவோ இந்த வரிதண்டுபவரைப் போலவோ இல்லாதது பற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன் வாரத்தில் இருமுறை நோன்பு இருக்கிறேன், என் வருவாயில் எல்லாம் பத்திலொரு பங்கைக்கொடுக்கிறேன்.' ''ஆனால் வரிதண்டுபவர் தொலையில் நின்றுகொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கக்கூடத் துணியாமல் தம் மார்பில் அடித்துக் கொண்டு, 'கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்' என்றார்.'' இயேசு, ''பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார். ஏனெனில் தம்மைத் தாமே உயர்த்துவோர் தாழ்த்தப் பெறுவர் தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்'' என்றார்.

(லூக் 18 :9-14)

நாம் செபிக்கும்போது;

- கடவுள் எம்மை அறிந்திருப்பவராதலால் எம்மைப் பற்றிய வருணனை தேவையில்லை
- மற்றவர்களுடன் எம்மை ஒப்பிடத் தேவையில்லை
- மற்றவர்களை வெறுக்கத் தேவையில்லை
- எமது பலயீனங்கள், பாவங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்
- நாம் எளிமையாக செபிக்க வேண்டும்.

என்ற படிப்பினையை மேற்கண்ட பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமையின் மூலம் கற்றுக்கொள்ளலாம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் செபிக்கும்போது பலவித உடல்நிலைகளை பயன்படுத்துகின்றோம். அவை, கைகளைக் குவித்து நெஞ்சில் வைத்தல், கைகளை விரித்தல், சிரம் தாழ்த்தி தலை மேல் கரம் குவித்து வணங்குதல், முழந்தாள்படியிட்டு செபித்தல் ஆகியனவாகும். இந்த உடல் நிலைகள்மூலம் இறை தந்தைக்கு எம் உள்ளத்திலுள்ள மதிப்பு, எமது எளிமையான பண்பு ஆகியன காட்டப்படுகிறது.

ஆகவே நாம் செபிக்கும்போது முறையான உடல்நிலைகளின் ஊடாக கடவுளுக்குரிய புகழ்ச்சியை அவருக்கே எப்போதும் அளிப்போம்.

**செயற்பாடு**

1. செபம் என்றால் என்ன?
2. செபத்தின் நான்கு வகைகளை எழுதுக.
3. கீழ்காணும் உவமைகளிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளக் கூடிய மாதிரிகைகள் இவ்விரெண்டு எழுதுக.
   - நள்ளிரவில் வந்த நண்பன்
   - நேர்மையற்ற நடுவன்
   - பரிசேயரும் வரி தண்டுபவரும்.



*வாழ்க்கைக்கு........*

*கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள் என்ற ஆண்டவரின் வார்த்தையை மனதில் பதித்து தினமும் செபிப்போம்.*